செய்தி வெளியீடு எண்.18-2020 நாள்: 15.08.2020

**விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.**

**கோலியனூர் பகுதிக்குட்பட்ட சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவா திரு.ஆ.அண்ணாதுரை.,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.**

**கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் சிறப்பாக பணியாற்றிய 110 அலுவலா் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

**********

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மைதானத்தில் சுதந்திர தின விழா இன்று சமூக இடைவெளி பின்பற்றி சிறப்பாக கொண்டாடப்பட்டது. முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவல் கண்காணிப்பாளர் திரு.இராதாகிருஷ்ணன், அவர்கள் உடன் செல்ல காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அணிவகுப்பினை திறந்த ஜீப்பில் சென்று பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து தீயணைப்புத்துறை, முன்னாள் படைவீரர் நலப்படை, ஊர்காவல்படை, சாரண, சாரணியர், தேசிய மாணவர் படை, சிறார் செஞ்சிலுவை அமைப்பு ஆகியோர்களின் அணிவகுப்பு மரியாதையினையும் ஏற்றுக் கொண்டார்.

சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டதற்கான நிகழ்வை குறிக்கும் வகையில் வெண்புறாக்களையும், வண்ண பலூன்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.,இ.ஆ.ப., அவர்கள் பறக்கவிட்டார்.

அதனைத் தொடர்ந்து கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் சிறப்பாக பணியாற்றிய வருவாய்த்துறை, சுகாதாரத்துறை, பொதுப்பணித்துறை, வனத்துறை, காவல்துறை, வேளாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளைச் சோ்ந்த 110 அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடைவடிக்கைக்காக தனிமைப்படுத்தும் மையங்களை வழங்கிய தனியார் கல்லூரிகளின் முதல்வர் மற்றும் தாளாளர்களை பாராட்டி நற்கான்றிதழ்களை வழங்கினார். சுதந்திர தின விழாவை சிறப்பாக நடத்திட பல்வேறு ஏற்பாடுகளையும், பணிகளையும் செய்து ஒத்துழைப்பு நல்கிய சம்பந்தப்பட்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.,இ.ஆ.ப., அவர்கள் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டார்.

மேலும், இதனைத் தொடர்ந்து சுதந்திர தின விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை. இ.ஆ.ப., அவர்கள் சுதந்திர போராட்ட தியாகிகளை கொளரவிக்கும் வகையில கோலியனூர் பகுதியில் வசிக்கும் (லேட்) தியாகி திரு.எஸ்.டி.கிருஷ்ணன் அவர்களின் வாரிசுதாரர் திருமதி.சாரதாம்மாள் மற்றும் (லேட்) தியாகி அபரன்ஜி குப்தா அவர்களின் வாரிசுதாரர் திருமதி.சுலோச்சனா ஆகியோர்களின் வீட்டிற்கு நேரில் சென்று தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கி மரியாதை செலுத்தினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.,இ.ஆ.ப., அவர்கள் பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கி மரியாதை செலுத்திய போது கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளுக்காக ரூ.12,500 நிதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை. இ.ஆ.ப., அவர்களிடம் சுதந்திர போராட்ட தியாகி அபரன்ஜி குப்தா அவர்களின் வாரிசுதாரர் திருமதி.சுலோச்சனா அவர்கள் வழங்கினார்.

இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையிலும் சுதந்திர போராட்ட தியாகிகளை வீட்டிற்கே வந்து கொளரவித்த தமிழக அரசுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் தியாகிகளின் வாரிசுதாரர்கள் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொண்டனர்.

இவ்விழாவில், விழுப்புரம் சரக காவல்துறை துணை தலைவர் திரு.கே.எழிலரசன்,இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இராதாகிருஷ்ணன், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., மாவட்ட வன அலுவலர் திரு.அபிஷேக் தோமர்,இ.வ.ப., ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வெ.மகேந்திரன், சார் ஆட்சியர் டாக்டர்.அனு.,இ.ஆ.ப.(திண்டிவனம்), விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இராஜேந்திரன், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.ரூபினா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) திருமதி.த.அம்புரோஸியா நேவிஸ் மேரி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.மோகன் (விழுப்புரம்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) திருமதி.இராஜலட்சுமி, திருமதி.மஞ்சுளா (வளர்ச்சி), திரு.பெரியசாமி (விவசாயம்), முதன்மைக் கல்வி அலுவலர் திரு.க.முனுசாமி, இணை இயக்குநர் (சுகாதாரம்) டாக்டர்.சண்முககனி, துணை இயக்குநர்கள் (சுகாதாரம்) டாக்டா.செந்தில்குமார் (விழுப்புரம்), மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.தாமோதரன், உதவி ஆணையர் (கலால்) திரு.மோகன், முன்னாள் படைவீரர் நல அலுவலர் லெப்டினன்ட் கர்னல் திருமதி.அருள்மொழி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருகுமார், விழுப்புரம் வட்டாட்சியர் திரு.கணேசன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.